**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 74/2019**

Deposition of the witness for Prosecution **PW** 4
Name : கருப்பசாமி

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (22.09.2025)

Accused present

முதல் விசாரணை

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு விபத்தில் இறந்து போன கருப்பாயி அம்மாள் எனது அம்மா. சுமார் ஏழு வருடத்திற்கு முன்பு நான் வயல்காட்டில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தேன். எனது அம்மாவிற்கு கொடிக்குறிச்சியிலிருந்து, சிவராம பேட்டை செல்லும் ரோட்டில் இரு சக்கர வாகனம் மோதி காயம்பட்டு, தென்காசி அரசு மருத்துவமனையில் கொண்டு போய்க் கொண்டிருப்பதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நான் சம்பவம் கேள்விப்பட்டு தென்காசி அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தபோது எனது அம்மாவிற்கு தலையிலும், கையிலும், இடுப்பிலும் காயம் ஏற்பட்டிருந்தது. தென்காசி அரசு மருத்துவமனையில் முதலுதவிகிச்சை செய்து விட்டு, பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக போகச் சொன்னார்கள். நானும் உடன் சென்றேன். அங்கு எனது அம்மா மூன்று நாட்கள் சிகிச்சை பெற்று, பின்னர் சிகிச்சை பலனின்றி எனது அம்மா இறந்து விட்டார். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். தென்காசி அரசு மருத்துவமனையில் வைத்து புகார் வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சி கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு இந்த சம்பவம் எப்படி நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். நானும், எனது அண்ணனும், எனது மனைவியோ காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் எனது மனைவி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். எனது மனைவி கொடுத்த புகாரில் தான் அறிவேன் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். எத்தனாம் தேதி எனது மனைவி புகார் கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்தன்று போனார்களா, இல்லை இரண்டு நாள் கழித்து போனார்களா என்றால் அது என்னைக்கு போனார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான், எனது மனைவி, கார்த்தி, கோபால் எல்லோருமே தென்காசி மருத்துவமனையில் இருந்து திருநெல்வேலிக்கு சென்று விட்டோம் என்றால் சரிதான். நான் சென்று எவ்வளவு நேரத்தில் திருநெல்வேலிக்கு சென்றார்கள் என்றால் ஒரு மணி நேரத்தில் அங்கு சென்று விட்டோம். அந்த ஒரு மணி நேரத்தில் எனது மனைவி இலத்தூர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், விபத்தில் இறந்து போன கருப்பாயி எனது தாயார் என்பதால் இழப்பீடு பெற வேண்டியது வகைக்காக போடப்பட்ட முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.09.22 12:01:53 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 74/2019**

Deposition of the witness for Prosecution **PW** 3
Name : **கார்த்திக்**

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (22.09.2025)

Accused present

முதல் விசாரணை

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து, நான் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். 07.09.2018 ம் தேதி மாலை 04.45 மணிக்கு கொடிக்குறிச்சி பஸ் ஸ்டாப்பில் நானும், கோபால் என்பவரும் டீ குடித்துக் கொண்டிருந்தோம். கொடிக்குறிச்சியில் இருந்து சிவராமபேட்டை செல்வதற்காக பாட்டி கருப்பாயம்மாளும், அவரது மருமகள் கோமதியும் பென்ஷன் வாங்குவதற்காக வந்தார்கள். அப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி பல்சர் இருசக்கர வாகனம் வந்தது. வந்து பாட்டி மீது இடித்துவிட்டது. பாட்டிக்கு தலையிலும், கை, கால், இடுப்பு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. அந்த வழியாக வந்த போக்கு ஆட்டோவில் நானும், கோபால் மற்றும் கருப்பாயம்மாளின் மருமகள் கோமதி ஆகியோர்கள் கருப்பாயம்மாளை சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு முதல் உதவி சிகிச்சை அளித்து விட்டு மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு போக சொன்னார்கள். நானும், கோபால் மற்றும் கருப்பாயம்மாளின் மகன் கருப்பசாமி ஆகியோர்கள் ஆம்புலன்ஸ் மூலமாக கருப்பாயம்மாளை பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். நான் ஒரு நாள் மட்டும் அங்கிருந்து விட்டு வீட்டிற்கு வந்து விட்டேன். கருப்பாயம்மாள் மூன்று நாட்கள் கழித்து 10.09.2018 ஆம் தேதி இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். இது சம்பந்தமாக

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எவ்வளவு நேரம் தென்காசி மருத்துவமனையில் இருந்தேன் என்றால் ஒரு மணி நேரம் இருந்தேன். கருப்பாயி, அவரது மருமகள், கோபால், கருப்பாயின் மகன் ஆகியோர் எல்லோருமே ஒரு மணி நேரம்தான் தென்காசி மருத்துவமனையில் இருந்தோம் என்றால் சரிதான். நானும், கோபாலும் டீ குடித்துக் கொண்டிருந்தோம். சம்பவம் நடந்த இடத்திற்கும், டீ கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 25 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்தவுடன் எவ்வளவு பேர் கூடினார்கள் என்றால் சுமார் 20 பேருக்கு மேல் கூடியிருந்தார்கள். டீக்கடையில் எங்களைத் தவிர நிறைய பேர் அங்கே நின்றார்கள் என்றால் சரிதான். டீக்கடை அருகே நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். பஸ் ஸ்டாப் அந்த பக்கம் கடை இருப்பதால் அங்கு கூட்டம் எப்போதும் இருப்பார்கள் என்றால் சரிதான். கருப்பாயம்மாள் ஊருக்குள் இருந்து வந்தார்களா, எங்கிருந்து வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பென்ஷன் வாங்குவதற்காக சிவராமபேட்டை தான் போக வேண்டும் என்றால் சரிதான்.

நான் பார்க்கும் போது பாட்டி நடுரோட்டில் நின்று கொண்டிருந்தது என்றால் இல்லை ஓரமாக நின்று கொண்டிருந்தது இந்த பாட்டி எவ்வளவு தூரம் பின்னாடி சென்றார் என்று எனக்கு தெரியாது. நான் இடித்த பின்பு தான் பார்த்தேன் என்றால் சரிதான். தெற்கே இருந்து வந்த வண்டியை நாங்கள் பார்க்கவில்லை. டீ குடித்துக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் பாட்டிக்கு 60, 65 வயது இருக்கும் என்றால் சரிதான். அப்போதும் அவரால் நடக்க முடியாமல் தான் நடந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். வடபுறம் வண்டி வருகிறதா, இல்லையா என்பதை கவனித்து விட்டு தெற்கிருந்து வருவதை கவனிக்காமல் நடுரோட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். வயதானவர் என்பதால் அவரால் திடீரென பின்புறமும் வர முடியவில்லை, முன்புறமும் போக முடியவில்லை என்றால் சரிதான். அவர் கூட வந்ததாக சொல்லப்படும் கோமதிக்கு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து எவ்வளவு நேரத்தில் நாங்கள் ஆட்டோவில் ஏற்றிவிட்டோம் என்றால் பத்து நிமிடத்தில் ஏற்றி விட்டோம். அந்த இடத்திற்கு வந்த நேரத்தில் போலீஸ் வந்தார்களா என்றால் வரவில்லை. காயம்பட்டு தென்காசி அரசு மருத்துவமனையில் ஒரு மணி நேரம் இருந்த பொழுது போலீசார் வந்தார்களா என்றால் வந்தார்கள். அங்கு வைத்து என்னிடம்

கையொப்பம் எதுவும் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். வேறு யார் எல்லாம் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் நான்கு பேரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். நான் அதில் என்ன எழுதி இருந்தது என்று படித்துப் பார்க்கவில்லை என்றால் சரிதான். அவசரத்தில் படித்து பார்க்கவில்லை.

அதேபோல் கோபாலும், கோமதியும், கையொப்பம் போட்டு கொடுத்தார்கள், அதில் என்ன எழுதியிருந்தது என்று அவர்களும் படித்துப் பார்க்கவில்லை என்றால் சரிதான். நானும், எங்கள் ஊரில் உள்ள பெரியாலோ, கோமதியோ, அவரது கணவரோ காவல் நிலையம் சென்று ஏதேனும் புகார் கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கருப்பாயி மகன்கள் 4 பேர் என்பதால், அவர்கள் யாரும் போய் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. மறுநாள் நான் திருநெல்வேலியில் இருக்கும் பொழுது அங்கு வந்து யாரும் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். திருநெல்வேலியில் வைத்து என்னிடம் எதுவும் கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கவில்லை. நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை. பார்ட்டி கவனிக்காமல் அவரது கவனக்குறைவால் சாலையில் நடுவில் சென்றுவிட்டதால் பாட்டி வண்டி மீது இடித்துவிட்டு அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு பெறுவதற்காக பாட்டி சொந்தக்காரர் என்பதால், அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct. S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.09.22 12:02:04 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 74/2019**

Deposition of the witness for Prosecution **PW** 2
Name : கோபால்

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (22.09.2025)

Accused present

முதல் விசாரணை

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து நான் ஆட்டோ வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். 07.09.2018 ஆம் தேதி மாலை 04.30 மணி அளவில் கொடிக்குறிச்சி பஸ் ஸ்டாப்பில் நானும், எனது நண்பர் கார்த்திக் என்பவரும் டீ குடித்துக் கொண்டிருந்தோம். அப்போது பல்சர் இருசக்கர வாகனம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. அப்போது நடந்து வந்து கொண்டிருந்த பாட்டி மீது இடித்து விட்டது. பிடித்த உடன் நானும் கார்த்திக் என்பவரும் அந்த பாட்டியை தூக்கி பார்த்தோம். அந்த பாட்டிக்கு தலையிலும், கையிலும், முதுகிலும், காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது. அவரை நானும், எனது நண்பரும், கோமதி ஆகியோர் சேர்ந்து ஒரு போக்கு ஆட்டோவில் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அங்கு முதல் உதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். நானும், எனது நண்பரும், கோமதியின் கணவரும் பாட்டியை பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்து, பின்னர் 10.09.2018 ஆம் தேதி இறந்துவிட்டார். பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்தை பெற்றுக் கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பவம் நடைபெறும் பொழுது நானும், கார்த்திக் மட்டும் தான் இருந்தோம், வேறு யாருமில்லை என்றால் ரோட்டில் நிறைய பேர் இருந்தார்கள். அந்த பாட்டி கருப்பாய் என்று தெரிந்து கொண்டுதான் நாங்கள் அவர்கள் வீட்டிற்கு போன் மூலமாக தகவல் சொல்லிவிட்டு, நாங்கள் இருவரும் ஆட்டோவில் ஏற்றி சென்றோம் என்றால் சரிதான். அந்த போக்கு ஆட்டோ எங்கு உள்ள ஆட்டோ என்று எங்களுக்கு தெரியாது. கூட்டம் கூடி விட்டார்கள். நாங்கள் டீ குடித்துக் கொண்டிருந்த இடத்திற்கும், பாட்டி நடந்து சென்ற இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 30 மீட்டர் தூரம் இருக்கும். கொடிக்குறிச்சி ஊரில் இருந்து ரோட்டிற்கு செல்வதற்கு தென்புறம் தான் டீக்கடைகள் உள்ளது என்றால் சரிதான். ரோட்டில் இருந்து டீக்கடையானது சுமார் 20 மீட்டர் தள்ளித்தான் உள்ளது என்றால் சரிதான். பசாஜ் பல்சர் பைக் தெற்கிலிருந்து வருவதை நாங்கள் பார்க்கவில்லை என்றால் சரிதான். இடித்த பின்பு தான் பார்த்தோம் அந்த பாட்டி குறுக்கே சென்றதா, இல்லை எதிரி வேகமாக வந்து இடித்தாரா என்ற விவரம் எதுவும் எங்களுக்கு தெரியாது. இடித்த பின்பு தான் நாங்கள் போய் பார்த்தோம். கோமதிக்கு நாங்கள் தகவல் சொல்லித்தான் வந்தார் என்றால் இல்லை. அவர் பாட்டி அம்மாவுடன் வந்தார், நாங்கள் பார்க்கவில்லை. நாங்கள் யாருக்கு ஊரில் தகவல் சொன்னோம் என்றால் பாட்டியின் பையன்கள் நாலு பேர் உள்ளார்கள். அவர்களுக்கு தகவல் சொல்லும் அங்கிருந்து அவர்கள் யாரும் அவசர போலீஸ் 108 க்கு போன் செய்யவில்லை என்றால் சரிதான்.

வண்டியை ஓட்டி வந்தவரின் நபரையோ, அவரது பெயர்,அவரது முகவரி எதுவும் எனக்கு தெரியாது என்றால் வண்டி நம்பர் தெரியும். ஆனால் அவரது ஊர், விவரம் எனக்கு தெரியாது. அவருக்கு விபத்தில் காயம் ஏற்பட்டு இருந்தால் அவரையும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அவரை வேறு ஆட்டோவில் அழைத்துச் சென்றார்கள். சிவராம பேட்டை செல்வதற்கு வடக்கு நோக்கி சென்று பின்பு கிழக்கு நோக்கி செல்ல வேண்டும் என்றால் சரிதான். பாட்டி வடக்கு நோக்கி 15 அடி சென்று, பின்பு சிவராமபேட்டைக்கு செல்லும் பொழுது ரோட்டில் நாங்கள் பாட்டியை தூக்கும் பொழுது எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 15 அடி தூரம் இருக்கும். பாட்டி தார் ரோட்டில் இருந்தாரா, இல்லை மண் ரோட்டில் இருந்தாரா என்றால் தார் ரோட்டின் அருகில் தான் இருந்தார். பாட்டி ரோட்டில் பாதி தூரத்திற்கு சென்றுவிட்டார். அதனால்தான் மோதி ரோட்டின் ஓரத்திற்கு விழுந்தார் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து ஒரு 100 அடி தூரத்தில் பேரிக்காடு உள்ளது என்றால் உள்ளது. அப்போ இருந்தது என்றால் எனக்கு தெரியாது. பாட்டி தெற்கே இருந்து வரும் வாகனத்தை பார்த்து இருந்தால் ரோட்டிலே நின்று இருக்கலாம் அவர் பார்க்காமல் அந்த பக்கம் பார்த்துக் கொண்டு ரோட்டில் வேகமாக நடந்துவிட்டார் என்றால் சரிதான் பாட்டிக்கு வண்டி வருவது என்று தெரிந்து முன்னாடியோ, பின்னாடியோ வயதானதால் ஓட முடியவில்லை என்றால் சரிதான். அவரது மருமகள் வயது குறைவு என்பதால் வண்டியை பார்த்தவுடன் பின்னாடி வந்து விட்டார்கள். அதனால் அவர்களுக்கு எந்த காயமும் கிடையாது என்றால் சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நாள், சொன்ன நேரத்தில், சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், பாட்டி எனக்கு சொந்தக்காரர் என்பதாலும், இழப்பீடு பெறும் வகைக்காக அவர்கள் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.09.22 12:02:11 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 74/2019**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : கோமதி

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (22.09.2025)

Accused present

<u>முதல் விசாரணை</u>

நான் கொடிக்குறிச்சியில் குடியிருந்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போன கருப்பாயி எனது மாமியார் எதிரியை தெரியும். 07.09.2018 ஆம் தேதி மாலை 04.45 மணிக்கு முதியோர் பென்ஷன் வாங்க வேண்டி நானும், எனது மாமியாரும் கொடிக்குறிச்சியில் இருந்து சிராமபேட்டை இ-சேவை மையத்தில்செல்வதற்காக கொடிக்குறிச்சி பஸ் ஸ்டாப்பில் ரோட்டை கிராஸ் செய்வதற்காக நின்று கொண்டிருந்தோம். அப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த பல்சர் இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி எனது மாமியார் மீது இடித்துவிட்டார். எனது மாமியாருக்கு தலையில் அடிபட்டு, தூக்கி வீசப்பட்டார். காலிலும் காயம் ஏற்பட்டது. எனது மாமியார் அந்த இடத்திலேயே மயக்கமாகிவிட்டார். நாங்கள் அந்த வழியாக சென்ற போக்கு ஆட்டோவில் எனது மாமியாரை தென்காசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். அங்கு பார்த்துவிட்டு முதல் உதவி சிகிச்சை அளித்துவிட்டு, திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்கு எனது மாமியாரை மேல்சிகிச்சைக்காக எனது கணவர் அழைத்துச் சென்றார். திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் மூன்று நாட்கள் சிகிச்சை பெற்று விட்டு 10.09.2018 ஆம் தேதி எனது மாமியார்

இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் இலத்தூர் காவல் நிலையத்தில் வைத்து புகார் வாக்குமூலத்தை கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். பிரேத பரிசோதனைக்கு பின்னர் பிரேதத்தை பெற்றுக் கொண்டோம். இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

உங்களது மாமியார் இறந்ததற்கு பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா இல்லை அதற்கு முன்பே கொடுத்தீர்களா என்றால் விழுந்த அன்றே கொடுத்து விட்டோம். நான் எனது மாமியாருக்கு வடபக்கம் இருந்தேனா, தென் பக்கம் நின்றேனா என்றால் அவர் என் முன்பு நடந்து சென்று கொண்டிருந்தார். எவ்வளவு தூரம் நடந்து சென்றார் என்றால் 5 அடி தொலைவில் நடந்து சென்றார். அந்த ரோட்டை கிராஸ் செய்து கொஞ்சம் தள்ளி சென்று சிவராமபேட்டை ஊருக்குள் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எங்கள் ஊரில் இருந்து வந்து கொஞ்ச தூரம் வடக்கே சென்று, அதன் பின்பு கிழக்கு நோக்கி சென்ற பின்புதான் சிவராமபேட்டை கிராமத்திற்குள் செல்ல முடியும் என்றால் சரிதான். அந்த ரோடானது நல்ல அகலமான தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். எங்க ஊருக்குள் செல்லும் ரோடு சிவராமபேட்டைக்குள் செல்லும் ரோடு குறுகிய ரோடு என்றால் சரிதான். ஆனால் மெயின் ரோடானது அகலமான ரோடு என்றால் சரிதான். நாங்கள் கொடிக்குறிச்சியிலிருந்து எவ்வளவு தூரம் சென்று கிழக்கே செல்ல வேண்டும் என்று முயற்சி செய்தோம் என்றால் 15 அடி தூரம் சென்று இருப்போம் நாங்கள் 15 அடி தள்ளி சென்று நேராக சிவராமபேட்டை விலக்கிற்கு நேரில் சென்று தான் திரும்பும் என்றால் சரிதான்.

நானும், எனது மாமியாரும் 5 அடி தூரத்தில் சென்ற பொழுது மண் தரையில் சென்றீர்களா, இல்லை தார் ரோட்டில் சென்றீர்களா என்றால் நான் மண் தரையில் சென்று, எனது மாமியார் தார் ரோட்டில் சென்றார். சம்பவ சமயத்தில் எனது மாமியாருக்கு 60 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது மாமியார் இறந்ததற்கு தென்காசி நீதிமன்றத்தில் இழப்பீடு வழக்கு தாக்கல் செய்து உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எதிரி ஓட்டி வந்த வாகனத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்த்தேன் என்றால் 10 அடி தொலைவில் இருந்து பார்த்தேன். நான் பார்த்ததும் அங்கே நின்று கொண்டேன். எனது அத்தை வண்டி வருகிறதா இல்லையா என்று கவனிக்கவில்லை என்றால் சரிதான். அவர் கவனிக்கவில்லை. எனது அத்தை அந்த பக்கம் பார்த்து சாலையில் வண்டி எதுவும் வராததால் விறுவிறு என நடந்து சென்று விட்டார் என்றால் சரிதான். எனது மாமியார் தெற்கே இருந்து வரும் வண்டியை பார்த்திருந்தால், எனது கையை பிடித்துக்

கொண்டு நின்றிருப்பார் என்றால் சரிதான். அவருக்கு வயதானதால் வண்டி வருகிறது என்பதை பார்த்து பின்புறமாக வர முடியவில்லை என்றால் சரிதான். அதனால் எனது அத்தை திடீரென வண்டி வருவதைப் பார்த்து நடுரோட்டிலேயே நின்று விட்டார் என்றால் சரிதான். எனது அத்தை முன்னாடியோ, இல்லை பின்னாடியோ வந்திருந்தால் அந்த வண்டி எனது அத்தை மீது இடிக்காமல் அதுவாக சென்று இருக்கும் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், இந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், பின் யோசனையால் மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்துவிட்டு, காவல் நிலையத்தில் வைத்து புகார் கொடுத்ததாக பொய்யாகச் சொல்லி நாங்கள் இழப்பீடு பெரும் வகைக்காக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, காயம்பட்டு இறந்து போன கருப்பாயி எனது அத்தை என்பதால், அவருக்காக வேண்டி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.09.22 12:02:17 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai